**சுருக்கம்**

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம்–III –உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் திட்டங்களை செயல்படுத்துதல் – நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் மற்றும் மண்டல இயக்குநர்கள் அலுவலகம் – கூடுதல் பணியிடங்கள் தோற்றுவித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.2) துறை**

**அரசாணை (நிலை) எண்.86** நாள். 18.06..2007.

படிக்கப்பட்டது:

1. அரசாணை(நிலை) எண்.89, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.2) துறை, நாள்.17.6.2005.
2. அரசாணை(ப) எண்.415, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.25.10.2005.
3. அரசாணை(ப) எண்.355, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.09.2006.

3\. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் எண்.76054/2006/WB-I, நாள்.18.2.2007.

-----

**ஆணை**

முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் உலக வங்கி உதவியுடன் திட்டங்களை செயல்படுத்திட சில பணியிடங்களை தோற்றுவிக்க அரசானது ஒப்புதல் வழங்கியுள்ளது.

2\. நான்காவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் –III–ன் கீழ் நகர்ப்புற முதலீட்டுக் கூறின்கீழ் உள்ள திட்டங்களான பாதாள சாக்கடைத் திட்டம், குடிநீர் வழங்கும் திட்டம், சாலைப்பணிகள் ஆகியவை அதிக எண்ணிக்கையில் செயல்படுத்தப்படுவதால் பணி நிலை பெருகியுள்ளது என்றும், சுருக்கமாக திட்டம் செயற்பரப்பு அதிக முதலீட்டுடன் அதிகரித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் உலக வங்கியின் 2வது தூதுக்குழு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் ஆகியவற்றை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது எனவும், மேலும் புதிதாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள திட்டத்தின் கீழ் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொழில்நுட்ப வடிவமைப்புகளை ஆய்வு செய்து ஒப்புதல் வழங்குவதற்கான கூடுதல் தொழில்நுட்ப பணியிடங்கள் நகராட்சி நிர்வாக ஆணையர்

அலுவலகத்திற்கு தேவையாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் இரண்டாவது மற்றும் மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளில் அரசு பல்வேறு பயிற்சி திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து அப்பயிற்சி திட்டங்கள் வெவ்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன என்றும், தற்பொழுது நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் பயிற்சி பிரிவினை மேம்படுத்த வேண்டியது அவசியமாகும் என்றும் தெரிவித்து, மேற்படி காரணங்களின் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் மற்றும் மண்டல இயக்குநர் அலுவலகத்தில் கூடுதல் பணியிடங்கள் உருவாக்கிட வேண்டியது அவசியம் என்றும் மேலும் 6.2.2007ல் நடைபெற்ற மாநில அளவிலான திட்ட ஒப்புதல் குழு கூட்டத்தில் பின்வரும் பதவிகளை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் மற்றும் மண்டல இயக்குநர் அலுவலகம் ஆகியவற்றில் உருவாக்கிட ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்:–

| வ. எண். | பதவிகளின் பெயர் | சம்பள விகிதம் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் | | |
| 1. | செயற்பொறியாளர் | 10000 –325 –15200 | 1 (ஒன்று) |
| 2. | உதவி செயற்பொறியாளர் | 8000 – 275 –13500 | 2 (இரண்டு) |
| 3. | உதவி பொறியாளர் | 6500 – 175 – 11100 | 2 (இரண்டு) |
| 4. | முதநிலை வரைவாளர் | 6500 – 175 – 11100 | 1 (ஒன்று) |
| 5. | கண்காணிப்பாளர் | 5700 – 175 – 9200 | 1 (ஒன்று) |
| 6. | உதவியாளர் | 4000 – 100 – 6000 | 4 (நான்கு) |
| 7. | கணக்காளர் | 4000 –100–6000 | 1 (ஒன்று) |
| 8. | இ.டி.பி. உதவியாளர் | 4000 –100–6000 | 2 (இரண்டு) |
| 9. | தட்டச்சர்(ம) புள்ளி விவர பதிவாளர் | 3200–85–4900 | 1 (ஒன்று) |
| 10. | அலுவலக உதவியாளர் | 2550–55–2660–60–3200 | 2 (இரண்டு) |
| 11. | ஒட்டுநர் | டெஸ்கோவில் இருந்து ஒப்பந்த அடிப்படையில் | 2 (இரண்டு) |
| | | **மொத்தம்** | **19 (பத்தொன்பது)** |
| | **நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் (மண்டலத்திற்கு ஒரு பணியிடம் வீதம் ஏழு மண்டலங்களுக்கும்)** | | |
| 1. | உதவி செயற்பொறியாளர் | 8000 – 275 –13500 | 7 (ஏழு) |
| 2. | வரைவாளர் நிலை–II | 5500– 175 – 9000 | 7 (ஏழு) |
| 3. | தட்டச்சர்(ம) புள்ளி விவர பதிவாளர் | 3200–85–4900 | 7 (ஏழு) |
| | | **மொத்தம்** | **21 (இருபத்தி ஒன்று)** |

மேலும் மாநில அளவிலான திட்ட ஒப்புதல் குழு பொருள் நிரல் குறிப்பில் ஒப்புதல் அளித்துள்ளவாறு மேற்காணும் பதவிகளுக்கான செலவினத்தை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III நிதியின் கீழ் சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பில் பற்று வரவு வைக்கவும் ஒப்புதல் அளித்துள்ளது என்றும், மேற்படி மாநில அளவிலான திட்ட ஒப்புதல் குழுவின் 6.2.2007 கூட்டத்தின் கூட்ட நடவடிக்கை

குறிப்பின் பேரில் மேற்படி கூடுதல் பணியிடங்கள் தோற்றுவிக்க ஒப்பளிப்பு வேண்டியும் மாநில அளவிலான திட்ட ஒப்புதல் குழு பொருள் நிரல் குறிப்பில் ஒப்புதல் அளித்துள்ளவாறு மேற்காணும் பதவிகளுக்கான செலவினத்தை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III நிதியின் கீழ் சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பில் பற்று வரவு வைக்கவும் ஒப்புதல் வேண்டியும் ஆணை வெளியிடுமாறு அரசிடம் வேண்டியுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து மேலே பத்தி 2ல் உருவாக்க கேட்டுக் கொள்ளப்பட்ட கீழ்கண்ட பணியிடங்களை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் மற்றும் மண்டல இயக்குநர் அலுவலகம் ஆகியவற்றில் உருவாக்கி அரசு ஒப்பளித்து ஆணையிடுகிறது:-

| **வ. எண்.** | **பதவிகளின் பெயர்** | **சம்பள விகிதம்** | **பதவிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| | நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் | | |
| 1. | செயற்பொறியாளர் | 10000 –325 –15200 | 1 (ஒன்று) |
| 2. | உதவி செயற்பொறியாளர் | 8000 – 275 –13500 | 2 (இரண்டு) |
| 3. | உதவி பொறியாளர் | 6500 – 175 – 11100 | 2 (இரண்டு) |
| 4. | முதநிலை வரைவாளர் | 6500 – 175 – 11100 | 1 (ஒன்று) |
| 5. | கண்காணிப்பாளர் | 5700 – 175 – 9200 | 1 (ஒன்று) |
| 6. | உதவியாளர் | 4000 – 100 – 6000 | 4 (நான்கு) |
| 7. | கணக்காளர் | 4000 –100–6000 | 1 (ஒன்று) |
| 8. | இ.டி.பி. உதவியாளர் | 4000 –100–6000 | 2 (இரண்டு) |
| 9. | தட்டச்சர்(ம) புள்ளி விவர பதிவாளர் | 3200–85–4900 | 1 (ஒன்று) |
| 10. | அலுவலக உதவியாளர் | 2550–55–2660–60–3200 | 2 (இரண்டு) |
| 11. | ஓட்டுநர் | டெஸ்கோவில் இருந்து ஒப்பந்த அடிப்படையில் | 2 (இரண்டு) |
| | | **மொத்தம்** | **19 (பத்தொன்பது)** |
| | **நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் (மண்டலத்திற்கு ஒரு பணியிடம் வீதம் ஏழு மண்டலங்களுக்கும்)** | | |
| 1. | உதவி செயற்பொறியாளர் | 8000 – 275 –13500 | 7 (ஏழு) |
| 2. | வரைவாளர் நிலை–II | 5500– 175 – 9000 | 7 (ஏழு) |
| 3. | தட்டச்சர்(ம) புள்ளி விவர பதிவாளர் | 3200–85–4900 | 7 (ஏழு) |
| | | **மொத்தம்** | **21 (இருபத்தி ஒன்று)** |

மேலும் மாநில அளவிலான திட்ட ஒப்புதல் குழு பொருள் நிரல் குறிப்பில் ஒப்புதல் அளித்துள்ளவாறு மேற்காணும் பதவிகளுக்கான செலவினத்தை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–ஐஐஐ நிதியின் கீழ் சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பில் பற்று வரவு வைக்கவும் ஒப்புதல் அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.71/இசெ(மப)/07 மற்றும் 39610/சிஎம்பிசி/07, நாள்.15.06.2007 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.தீனபந்து
அரசுச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–600 005.
சம்பள கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை–5.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–9
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18
மாநில கணக்காய்வுத் தலைவர், (தணிக்கை) சென்னை–18
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை–9
நிதித்(நநி(ம)குவ) / (சிஎம்பிசி) துறை, சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (வ.செ) துறை, சென்னை–9.
இ.கோ/ உ.ந.

–/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/–

பிரிவு அலுவலர்